முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1645

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரம ஆனந்த ஞானகுருவே
சீர்திருத்தம் செய்து இந்த கலியினில்
சித்திமிகு மகான்களை உருவாக்க
2. உருவாக்க அவதாரம் எடுத்த உயர் ஞானியே
உலகத்தில் உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
குருவாக மகாசூட்சுமமாய் உள்ளிருந்து
குறையிலா ஞானஅறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது சேல்திங்களில் உரைப்பேன்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 18 ம் நாள், 31.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் சக்திபல கூடிட
ஆற்றலாக ஆறுமுகன் நித்தம் நித்தம்
சக்தி வழங்கி வருகின்றேன்
4. வருகவே அரங்கனுக்கு பிரம்ம வேளை காலங்களில்
வல்லமைபட தினமும் ஆறுமுகன் என் ஆற்றல் பெருக்கம் கூடிவர
வருகவே அரங்கனுக்கு தருகின்ற உணவும்
அரங்கனுக்கு தருகின்ற வழிமுறைகள் அத்தனையும்
5. ஆறுமுகன் யான் தருவதாகும்
அன்னதனால் அரங்கன் வழங்குகின்ற
தீட்சையும் ஞானமும் உபதேசமும் தர்மமும்
ஆறுமுகன் யானே அரங்கன் வழி செய்வதாகும்
6. அன்னதனால் உலகோர் ஏற்று அரங்கன் வழி தொடர்ந்து வந்தால்
அனைவருக்கும் பாதுகாப்பு பெருகுவதோடு
வரமென வருகின்ற யாவருக்கும் ஞானம் பெருகி
வையகத்தை காக்கின்ற மகாசக்தியாக

7. தர்மபலமும் ஞானபலமும்
தயவு மிகுந்த  ஞானிகளாக உருவாகும் மாற்றமும்
மாற்றமும் அரங்கன் தவதர்ம சக்தியாலே கிட்டும்
வல்லமைபட உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
8. வரம் தரும் அரங்கன் திருவடி பற்றி
முருகா அரங்கா என வணங்கி
முழுமைபட ஞானம் பயின்று
மொழிகுவேன் அரங்கன் வகுத்துள்ள
9. சத்திய ஜோதி அமைப்பான
ஆன்மீக அரசியல் களம் கண்டு
அகிலத்தில் சேவை வழி இறங்கிட
அற்புதம் கலியினில் சடுதி இனிதே நடந்தேறும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

—சுபம்—